# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**OS Case No. 41/2020**
**நாள் 10-01-2024**

**பெயர் : பிச்சைராஜ்**

**PW1**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல் துறையில் இருந்து பணிபுரிந்து பின்பு VRS விருப்ப ஓய்வு 58 வயதில் பெற்றேன். நான் எந்த வருடம் ஓய்வு பெற்றேன் என்றால் 2016 ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு வயது 62 ஆகும். நிருபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது. நேரடியாக தாவா சொத்தை பார்வையிட்ட வகையிலும், நீலோத்பாளம்பாள் என்பவரை கேட்டும் தெரிந்து கொண்டுதான் தாவா சொத்து குறித்தான விவரங்களை நிருபண பிரமான பத்திரத்தில் இரண்டாவது பராவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பணி ஓய்வு பெற்ற போது கிடைத்த ஒட்டு மொத்த பணப்பலன்களை நான் நிருபண பிரமான பத்திரத்தில் கூறவில்லை என்றால் சரிதான். அது போல் எவ்வளவு தொகையை எவ்வளவு தொகையை முதலீடு செய்து யாரிடம் இருந்து மொத்தமாக மீன்களை வாங்கி விற்பனை செய்து பெருள் ஈட்டி வருகிறேன் என்பதை நிருபண பிரமான பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த ஆண்டு நான் மீன் வாங்கி வியபாரம் செய்கிறேன் என்ற விவரத்தை நிருபண பிரமான பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நிருபண வாக்கு மூலத்தில் நான் உண்மையிலேயே மீன் வியபாரம் செய்து வருகிறேன் என்றால் மீன் வருமானம் மற்றும் மேலே செல்லியுள்ள விவரங்களை குறிப்பிட்டு செல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. 2018 ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வாரத்திலேயே தாவா சொத்து குறித்தான விற்பனை குறித்து பேச ஆரம்பித்தோம். நீலோத்பாளாம்பாள் என்பவரிடம் நாகப்பட்டினம் பெருமாள் கோவில் தெற்கு தெருவில் அவரது வீட்டில் வைத்து பேசினோம். மேற்படி பேச்சுவார்த்தையின் போது என்னுடனும் நீலோத்பாளம்பாலுடனும் சில நபர்கள் உடன் இருந்தனர். மேற்படி விவரங்களை எனது நிருபண பிரமான பத்திரத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ரூ.72 லட்சம் பேசி ரூ.71 லட்சத்தை 19.10.2018 ம் தேதி அன்று நீலோத்பாளம்பால் வீட்டில் வைத்து கொடுத்தேன். மேற் சொன்ன

ரூ.71 லட்சத்தில் எவ்வளவு தொகை வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது, எவ்வளவு தொகை நண்பர்களிடம் இருந்து பெறப்பட்டது, எவ்வளவு தொகை கையில் இருந்து கொடுக்கப்பட்டது என்பதை நிருபண பிரமான பத்திரத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே காவல் துறையில் பணிபுரிந்ததால் ஒரு நபருக்கு தொகை கொடுக்கும் போது எந்த வகையில் அதனை கொடுக்க வேண்டும் என்பது தெரியும் என்றால் சரிதான். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் தொகை கொடுக்கும் போது வங்கி காசோலையாக தான் கொடுக்க வேண்டும், ரொக்கமாக கொடுக்க கூடாது என்று எனக்கு தெரியும். என் தம்பி மனைவி என்பதால் ரொக்கமாக கேட்டதால் நான் பணம் கொடுத்தேன். நீலோத்பாளம்பால் என் தம்பி மனைவி என்பதால் அவர் ரொக்கமாக கேட்டதையும் அதனால் நான் அவரிடம் ரூ.71 லட்சம் ரொக்கமாக கொடுத்ததையும் நிருபண பிரமான பத்திரத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பணி ஓய்வு பெற்ற போது ரூ.16 லட்சம் அரசு இடம் இருந்து பணப்பலன்கள் கிடைத்தது. மேற்படி ரூ.16 லட்சத்திற்கு உரிய ஆவணத்தை நான் அசல் வழக்கில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். மீதம் உள்ள ரூ.65 லட்சம் எனது மனைவி மீன் வியபாரம் செய்தது மூலம் கிடைக்க பெற்ற தொகையாகும். மேற்படி விவரத்தையும் எனது நிருபண பிரமான பத்திரத்தில் கூறியுள்ளேன். நானும் எனது மனைவியும் மொத்த மீன் தொழில் செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொழில் செய்வதாக சொல்வது பொய் என்பதால் தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவியையும் இவ்வழக்கில் தொகை குறித்து சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேன். ரூ.65 லட்சம் எனது மனைவி வீட்டில் சேமிப்பாக வைத்திருந்த தொகை ஆகும். மேற் சொன்ன ரூ.71 லட்சத்திற்கு வருமான வரி கட்டவில்லை, அதனை கணக்கிலும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தவறான சங்கதிகளை சொல்வதால் தான் வருமான வரித்துறை கணக்கில் மேற் சொன்ன தொகையை காண்பிக்கவில்லை மற்றும் அது கட்டவில்லை என்றால் சரியல்ல. மீன் வியபாரத்திற்கு வருமான வரி செலுத்த வேண்டி அவசியம் இல்லை. மேற்படி விவரங்களையும் நிருபண பிரமான பத்திரத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு மேற்படி ரூ.71 லட்சம் தொகை கொடுக்கும் அளவிற்கு எவ்வித வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. அதனால் தான் மேற்படி தொகை எனக்கு எவ்வாறு கிடைக்க பெற்றது என்று எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2018 அக்டோபர் மாதம் முழுவதும் வெளிநாடோ அல்லது வெளியூரோ செல்லவில்லை என்றால் சரிதான்.

ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட முத்திரை தாள் நீலோத்பாளம்பாள் சென்னையில் இருந்து வாங்கி வந்தார். இந்த விவரங்களையும் நிருபண பிரமான பத்திரத்தில் கூறியுள்ளேன். மேற்படி ஒப்பந்தத்திற்குறிய முத்திரை தாள் விற்பனையாளரை என் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேன். மேற்படி 19.10.2018 தேதியிட்ட கிரைய உடன் படிக்கை ஆவணம் யாரால் தயார் செய்யப்பட்டது என்பதை வழக்கிலும், நிருபண பிரமான பத்திரத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ரகுநாதன் மற்றும் பிரதாப் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து இட்டனர். மேற்படி இரு சாட்சிகளையும் என் தரப்பில் விசாரணை செய்ய தயாராக உள்ளேன். மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தில் இந்த ஆவணத்தை தயார் செய்த சாட்சி முதல் நபராகவும் பிறகு இந்த ஆவணத்தில் கண்ணுற்ற சாட்சிகளான ரகுநாதன், பிரதாப் ஆகிய இருவரும் இரண்டு மூன்று நபர்களாகவும் சாட்சி கையொப்பம் இட்ட பின்பு நான் அதில் கையெழுத்து இட்டேன் அதன் பின்னர் நீலோத் பாளாம்பாள் அதில் கையெழுத்து இட்டார் என்றால் சரிதான். மேற் சொன்ன கிரைய ஒப்பந்தத்தில் நீலோத்பாளாம்பாள் கையெழுத்து இடவில்லை என்றாலும், அதனை என் தரப்பில் செய்தேன் என்றாலும் சரியல்ல. மேற்குறிய கிரைய ஒப்பந்த ஆவணமானது நீலோத்பாளம்பாள் சொத்தினை அபகரிக்க வேண்டி என் தரப்பில் மோசடியாக தயார் செய்யப்பட்ட மோசடி ஆவணம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள பிரதிவாதி கையெழுத்து அவரடையது அல்ல என்பதை நிருபணம் செய்வதற்கு அது குறித்தான கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைத்து அறிக்கை பெறுவதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். நான் மேற்குறிய வகையில் கிரைய ஒப்பந்த ஆவணமானது உருவாக்கப்படவில்லை என்பதால் தான் தவறான தகவல்களை ஆவணம் உருவாக்கம் குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த தினத்தன்று நீலோத்பாளம்பாள் என்னிடம் வழக்கு சொத்து குறித்து என்னஎன்ன மூல ஆவணங்களின் அசல்களையும் ஒப்படைத்தார் என நிருபண பிரமான பத்திரத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி கொடுத்த ஆவணங்களின் அசல்களை தான் நான் வழக்குடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வ.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட சான்றிட்ட நகல்கள் என்றால் சரிதான். உண்மையில் தாவா சொத்தில் மூல ஆவணங்களை பிரதிவாதி என்னிடம் கொடுத்திருந்தால் அதனை நான் தாக்கல் செய்து இருப்பேன் அவ்வாறு

இல்லாததால் தான் மேற்குறிய நகல்களை தவறான தகவல்கள் சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் ஏற்படுத்திய அன்றே தாவா சொத்தின் அனுபவத்தை வாய் மொழியாக பிரதிவாதி என்னிடம் ஒப்படைத்தார் என்பதை வழக்கில் கூறியுள்ளேன். தாவா சொத்து ஒப்பந்த தேதியில் இருந்து எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதற்கான எவ்வித அரசு ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அனுபவத்தில் தாவா சொத்து இல்லை என்பதால் தான் அது குறித்தான அரசு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற் சென்ன கிரைய ஒப்பந்தத்தில் தாவா சொத்தில் ஏற்கனவே வாடகை தாரர்களாக இருந்த நபர்களிடம் நான் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளலாம் எனவும், கட்டிட உரிமையாளராக தொடரலாம் எனவும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.5 உள்ளடங்கிய ஆறு வாடகை பத்திரங்கள் யாரால் எழுதப்பட்டது என்பதை வழக்கிலும், நிருபண பிரமான பத்திரத்திலும் கூறியுள்ளேன். நான் வாடகை பத்திரம் ஏற்படுத்தி கொண்ட 6 நபர்களும் ஏற்கனவே தாவா சொத்தில் குடியிருந்து வந்த நபர்கள் அல்ல, அந்த வாடகை ஒப்பந்தத்தில் உள்ள நபர்களின் முகவரி தாவா சொத்தை குறிப்பிடுவன அல்ல. மேற்படி 6 நபர்களையும் என் தரப்பில் சாட்சிகளாக விசாரணை செய்ய தயாரக உள்ளேன். வாடகை ஒப்பந்தத்தை உருவாக்கியவரையும் நான் சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேன். வாடகை பத்திரங்கள் அனைத்தும் தாவா சொத்து எனது அனுபவத்தில் தான் உள்ளது என காண்பிப்பதற்காக என்னால் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. மேற் சொன்ன கிரைய ஒப்பந்த ஆவணத்தை நிச்சையமாக பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். ஆனால் 6 மாத காலத்தில் தாவா சொத்தை எனக்கு கிரைய சாசனம் செய்துவிடுவதாக சொன்னதால் நான் பதிவு செய்யவில்லை. என்னால் உருவாக்கப்பட்ட மோசடி ஆவணம் என்பதால் தான் கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நீலோத்பாளம்பாளிடம் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க வேண்டி என்ன என்ன தேதிகளில் எந்த முறைகளில் கேட்டேன் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் கையெழுத்து என்னுடையது அல்ல என நீலோத்பாளம்பாள் தெரிவித்துள்ளார் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நீலோத்பாளம்பாள் என்பவருக்கும் எனது தம்பி வின்செண்ட் (எ) தாஸ் ஜோசப்

ஜான்க்கும் விவகரத்து ஆகவில்லை, அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தரப்பில் மேற்படி அறிவிப்பிற்கு முன்பு எவ்வித அறிவிப்பும் பிரதி வாதிக்கு அனுப்பவில்லை அதற்கு எந்த பதில் அறிவிப்பும் வரவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை மறைத்து தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எனது தம்பி வின்செென்ட் (எ) தாஸ் ஜோசப் ஜான் மற்றும் குடும்பத்தினர் பிரதிவாதி தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதற்காக கிரைய ஒப்பந்தம் என்னால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தை பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் மோசடி என்பதால் நான் கேட்டுள்ள மாற்று பரிகாரமும் எனக்கு கிடைக்ககுடியது அல்ல என்றால் சரியல்ல. மோசடியான ஆவணங்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.